முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2018 யூலை

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

(Business operations and management)

2018-07-29
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  - (1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
    *எழுதுதல் - 03 மணித்தியாலம்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  - (3) *பரீட்சைக்கு விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *உங்களுக்குத் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில் விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*
  - (4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல்*** *நிரல் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள், செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தை*** *அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.15*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** வியாபார நிறுவனமொன்றிலுள்ள எந்தவொரு முறைமையினதும் பொதுவான கூறுகளாவன (elements) :

(1) உள்ளீடு, பொருள், கேள்வி
(2) உள்ளீடு, செயன்முறை, வெளியீடு
(3) உள்ளீடு, நுகர்வு, தேவைகள்
(4) உள்ளீடு, சேவைகள், பொருட்கள்

**1.2** பின்வருவனவற்றுள் உடலியல் (physiological) தேவை ஒன்றிற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) பாதுகாப்பு (2) கௌரவம் (3) நீர் (4) உறவுகள்

**1.3** பின்வருவனவற்றுள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி தொடர்பான சரியான கூற்று எது?

(1) உயர்ந்தபட்ச பங்குதாரர்களின் எண்ணிக்கை 02 ஆகும்.
(2) பொதுமக்களுக்குப் பங்குகளை விநியோகிக்க முடியும்.
(3) இதனை உருவாக்குவதற்கு சட்டரீதியான தேவைப்பாடுகள் எதுவுமில்லை.
(4) வருடாந்த அறிக்கையை வெளியிடுவது கட்டாயமானதல்ல.

**1.4** பின்வருவனவற்றுள் பணிச் சூழலின் (task environment) ஒரு கூறாக (component) **அமையாதது :**

(1) வழங்குநர்கள் (2) போட்டியாளர்கள் (3) ஊழியர்கள் (4) வாடிக்கையாளர்கள்

**1.5** பின்வருவனவற்றுள் நிறுவனம் ஒன்றின் பலமாகக் (strength) கருதப்படக்கூடியது எது?

(1) அரசாங்கக் கொள்கைகளின் மாற்றங்கள் (2) பண்டக்குறிப் பெயர் (Brand name)

(3) சந்தைப்படுத்தல் நிபுணத்துவக் குறைபாடு (4) போட்டியாளர்களின் விலைகள்

**1.6** பின்வருவனவற்றுள் வியாபாரம் ஒன்றின் உள்ளகச் சூழலின் ஒரு கூறாக (element) **அமையாதது** :

(1) நிறுவன கலாசாரம் (2) பெறுமதி முறைமை

(3) மனித வளங்கள் (4) போட்டியாளர்கள்

**1.7** பின்வருவனவற்றுள் நல்ல போக்குவரத்து முறைமை ஒன்றின் அம்சமாக (feature) அமைவது எது?

(1) பாதுகாப்பு (2) வேகம்

(3) செலவுச் சிக்கனம் (4) மேற்கூறிய எல்லாம்

**1.8** மனித வள முகாமைத்துவத்தில், நிறுவனம் ஒன்றின் புதிய ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற நிறுவனம் பற்றிய முறைசார் அறிமுகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) தொழிலுக்கு அறிமுகப்படுத்தல் (2) தெரிவுசெய்தல்

(3) பயிற்சியளித்தல் (4) ஆட்சேர்த்தல்

**1.9** பின்வருவனவற்றுள் வெகுமதிகளைத் தீர்மானிக்கின்ற வெளிவாரிக் காரணியாக (external determinant) அமைவது எது?

(1) நிறுவனத்தின் நட்டஈட்டுக் கொள்கை (2) பொருளாதார நிலைமை

(3) தொழில்தருநரின் கொடுப்பனவுத் தகுதி (4) வேலையின் பெறுமதி

**1.10** பின்வருவனவற்றுள் மனித வள முகாமைத்துவத்தில் தொழில்தருநரின் பார்வையில் நெறிமுறையற்ற செயற்பாடு ஒன்றாக **அமையாதது** எது?

(1) உடல்ரீதியான வன்முறை (Physical violence)

(2) குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்தல் (Using child labour)

(3) நெகிழ்ச்சியான வேலை நேரங்களைக் (flexible working hours )கொண்டிருத்தல்

(4) உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக ஊழியர்களை வற்புறுத்தல்

**1.11** தனிநபர் வேலைக் குறிப்பீடு (Job Specification) ஒன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு கூறு :

(1) வேலையை அடையாளப்படுத்தல்

(2) அடையப்பட வேண்டிய இலக்குகள்

(3) செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை

(4) விசேட பௌதிகத் தகைமைகள்

**1.12** பின்வருவனவற்றுள் எந்த சந்தைப்படுத்தல் எண்ணக்கருவானது (concept) வாடிக்கையாளர் பங்குகளைக் கைப்பற்றுதல், விசுவாசம் மற்றும் வாழ்நாள் பெறுமதி ஆகியவற்றின் மூலமான இலாபகரமான வளர்ச்சியுடன் அக்கறை கொண்டுள்ளது?

(1) சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (2) வாடிக்கையாளர் எண்ணக்கரு

(3) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (4) விற்பனைப்படுத்தல் எண்ணக்கரு

**1.13** குறிப்பிட்டதொரு பொருள் அல்லது சேவையினைத் தொடர்ச்சியாக வாங்கி நுகர்கின்ற வழக்கமான வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய சந்தை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) நிலையான சந்தை (2) கிடைப்பனவுச் சந்தை

(3) வியாபாரச் சந்தை (4) உண்மைச் சந்தை

**1.14** தகவல் முகாமைத்துவம் தொடர்பான பின்வருவம் கூற்றுக்களுள் **பிழையான** கூற்று எது?

(1) புற இணையம் (extranet) என்பது தெரிவுசெய்யப்பட்ட வெளியாட்களால் அணுகக்கூடிய ஒரு தனிப்பட்ட வலையமைப்பாகும்.

(2) இணையம் (Internet) என்பது TCP/IP நெறிமுறை (protocol) ஊடாக தொடர்பாடல் செய்கின்ற கணினிகளின் ஒரு உலகளாவிய வலையமைப்பாகும்.

(3) அக இணையம் (intranet) என்பது நிறுவனமொன்றிற்கு வெளியிலான ஓர் வலையமைப்பு ஆகும்.

(4) அக இணையம் ஒன்று கடவுச்சொற்கள் (passwords) மற்றும் பெயார்வோல்ஸ் (firewalls) போன்ற பாதுகாப்புச் செயற்பாடுகள் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

**1.15** பின்வருவனவற்றுள் வசதிகள் அமைப்புத்திட்டத்தின் (facility layout) நோக்கமாக **அமையாதது** எது?

(1) தொழிலாளரை வினைத்திறனான வகையில் பயன்படுத்தல்

(2) மூலப்பொருள் கையாளல் கிரயத்தை இழிவுபடுத்தல்

(3) முறையான பராமரிப்பை ஊக்குவித்தல்

(4) தொழிலாளர் புரள்வை அதிகரித்தல்

***1.16** முதல் **1.20** வரையுள்ள வினாக்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொல்/ சொற்களிலிருந்து சரியானதைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல்/ சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.16** .......... *[கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டு முறைமை (TPS) / தீர்மான உதவி முறைமை (DSS)]* என்பது முகாமைத்துவச் செயற்பாட்டு மட்டத்தில் செயற்படுகின்ற ஓர் தகவல் முறைமை ஆகும்.

**1.17** .......... *[தொழில்முயற்சி வளத் திட்டமிடல் (ERP) / நிறைவேற்று உதவி முறைமை (ESS)]* என்பது வியாபாரத்தை முகாமை செய்வதற்கு ஒன்றிணைக்கப்பட்ட செயலிகளின் (applications) முறைமை ஒன்றைப் பயன்படுத்துவதற்கு ஒரு நிறுவனத்தை அனுமதிக்கின்ற ஓர் வியாபாரச் செயன்முறை முகாமைத்துவ மென்பொருள் ஆகும்.

**1.18** .......... *(சந்தைப்படுத்தலும் விற்பனையும் / தொழில்நுட்ப அபிவிருத்தி)* என்பது போட்டரின் பெறுமதிச் சங்கிலியிலுள்ள துணை நடவடிக்கை (support activity) ஒன்றாகும்.

**1.19** .......... *(வேலை விரிவாக்கம் / வேலைச் சுழற்சி)* என்பது குறித்ததொரு கால இடைவெளியில் ஊழியர் ஒருவரை ஒரு வேலையிலிருந்து மற்றுமொரு வேலைக்கு மாற்றம் செய்யும் செயற்பாடு ஆகும்.

**1.20** .......... *(வேறுபடுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் / குவியப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல்)* இன் கீழ், ஒரு நிறுவனம் பொருட்கள் மற்றும் சேவைகளை வேறுபட்ட சந்தைப்படுத்தல் கலவை தந்திரோபாயங்களுடன் துண்டங்கள் ஒவ்வொன்றிற்காகவும் விருத்தி செய்யும்.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A இன் முடிவு*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

வியாபார நிறுவனம் என்பது ஒரு நபர் அல்லது நபர்களின் ஒரு குழு ஒரே வர்த்தகரீதியான நாட்டத்துடன் ஒன்றிணைந்து வேலை செய்வதாகும். வியாபார நிறுவனங்களை பல்வேறுபட்ட வழிகளில் வகைப்படுத்த முடியும். இதில் தனியுரிமை வியாபாரம் என்பது வியாபார உடைமையின் அடிப்படையிலமைந்த மிகவும் பொதுவான ஒரு வகையாகும். உடைமையின் வகையினைப் பொருட்படுத்தாது எந்தவொரு வியாபார நிறுவனத்திலும் துணைச் சேவைகள் (supportive services) முக்கியமான வகிபாகத்தினை ஆற்றுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தனியுரிமை வியாபாரம் ஒன்றின் அனுகூலங்கள் மூன்றையும் (03) பிரதிகூலங்கள் இரண்டையும் (02) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(b) வியாபார நிறுவனமொன்று, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிச் சேவைகளாகப் பெறக்கூடிய சேவைகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

வியாபார நிறுவனமொன்று அதன் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்கிறது. வாடிக்கையாளரால் குறிப்பிட்டதொரு பொருள் அல்லது சேவை தெரிவுசெய்யப்படுவதில் அதன் தரம் முக்கிய காரணியாக மாறியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வியாபார நிறுவனம் ஒன்றிற்கு தர முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தரம் தொடர்பான அம்சங்கள் (dimensions of quality) நான்கினை (04) **அடையாளம் காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

மனித வளம் என்பது எந்தவொரு நிறுவனத்திற்கும் மிக முக்கியமானதொரு வளமாகும். எனவே பல்வேறு நடவடிக்கைகளையும் உள்ளடக்கியிருக்கின்ற மனித வள முகாமைத்துவமானது நிறுவனத்தின் வெற்றிக்கு முக்கியமான ஒன்றாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நிறுவனம் ஒன்றிற்கு மனித வள முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பயிற்சியளித்தல் செயன்முறையில் உள்ளடங்கியுள்ள படிமுறைகளை (steps) **அடையாளம் காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 05

எந்தவொரு நிறுவனத்திற்கும் அதன் தன்மை மற்றும் நோக்கம் எதுவாக இருப்பினும் சந்தைப்படுத்தல் என்பது ஓர் இன்றியமையாத அம்சமாக இருக்கின்ற அதேநேரம், விளைதிறன்மிக்க பண்டக்குறி தந்திரோபாயமானது (brand strategy) அதிகரிக்கின்ற போட்டிச் சந்தை ஒன்றில் ஒரு பாரிய அனுகூலத்தைப் பெற்றுத்தருகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வியாபார நிறுவனம் ஒன்றிற்கு சந்தைப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) வெற்றிகரமான பண்டக்குறி (brand) ஒன்றின் பண்பியல்புகள் (characteristics) நான்கினை (04) **அடையாளம் காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட பேட் அன்ட் சண்ஸ் (Bert & Sons) கம்பனியானது** 1980 களில் கம்பஹாவில் தாபிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்குச் சொந்தமான வியாபாரம் ஆகும். இக்கம்பனியானது நாடு பூராகவும் புத்துணர்வு மிக்கதும் தரமானதுமான வெதுப்பகப் (பேக்கரி) உணவுகளை மலிவு விலையில் விற்பனை செய்வதில் புகழ்பெற்றதாகும். தற்போது இவ்வியாபாரமானது ஏறத்தாழ 600 ஊழியர்களைக் கொண்டு நாடுபூராகவும் அமைக்கப்பட்டுள்ள 50 விற்பனை நிலையங்களை இயக்குகிறது. **வரையறுக்கப்பட்ட பேட் அன்ட் சண்ஸ் கம்பனியானது** அதன் செயற்பாடுகளுக்காக ISO சான்றிதழை ஏற்கனவே பெற்றிருக்கிறது. இதன் உரிமையாளர்கள் அதன் பாரம்பரிய விற்பனை நிலையங்களை உணவகங்களாக மாற்றியமைப்பதன் மூலம் தமது வியாபார நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு அண்மையில் தீர்மானித்திருந்தனர். அதே நேரம், சர்வதேச துரித உணவு வலையமைப்புகளும்கூட (fast food chains) நாடுபூராகவும் அதன் செயற்பாடுகளை விரிவாக்குகின்றன. இந்தக் கடுமையான போட்டிக்கு முகங்கொடுப்பதற்கு, **வரையறுக்கப்பட்ட பேட் அன்ட் சண்ஸ் கம்பனியின்** முகாமையானது ஒன்லைன் (online) மற்றும் ஹொட்லைன் (hotline) சேவைகளின் ஊடாக தனது பொருட்களை வீட்டிற்கே கொண்டு சென்று கொடுக்கின்ற சேவையினை (home delivery service) ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறது. இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்லைன் கொள்வனவு வசதிகள் மற்றும் 24 மணி நேர அழைப்பு நிலைய வசதி ஆகியவற்றுடன்கூடிய கவர்ச்சிகரமானதொரு இணையத்தளத்தை உடனடியாக விருத்திசெய்ய வேண்டுமென தகவல் தொழில்நுட்ப (IT) முகாமையாளருக்கு கம்பனி பரிந்துரை செய்திருக்கிறது. அத்துடன் முன்மொழியப்பட்டுள்ள விரிவாக்கத்திற்கு வசதியளிப்பதற்காக கம்பனியானது பொருட்களை வீடுகளுக்குச் சென்று விநியோகிப்பதற்காக (delivery riders) 150 பேரையும் அழைப்பு நிலையத்தில் பணிபுரிவதற்கென (call centre staff) 20 பேரையும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் திட்டமிடுகிறது. மேலும், சிங்கப்பூரிலுள்ள வழங்குநர் ஒருவரிடமிருந்து சக்திச் சிக்கனமுடைய அவண் (energy-efficient oven) ஒன்றினை இறக்குமதி செய்வதன் மூலம் உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதற்கான வாய்ப்புக் காணப்படுவது பற்றி கம்பனியின் உற்பத்தி முகாமையாளருக்கு எடுத்துக்கூறப்பட்டது. **வரையறுக்கப்பட்ட பேட் அன்ட் சண்ஸ் கம்பனி** அதன் வழங்குநர்களுடன் வலுவான உறவினைப் பேணுவதற்கு முன்னுரிமை அளிக்கிறது. தற்போது, கம்பனியானது மரக்கறிகள் போன்ற அதன் சகல உள்ளீடுகளையும் விவசாயிகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து நேரடியாகக் கொள்வனவு செய்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) உலகமயமாதல் **வரையறுக்கப்பட்ட பேட் அன்ட் சண்ஸ்** கம்பனி மீது சாதகமான (positively) தாக்கத்தை செலுத்தியிருக்கின்ற வழிமுறைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட பேட் அன்ட் சண்ஸ்** கம்பனியின் சந்தைப்படுத்தல் கலவையில் (4‘P’s) உள்ளடங்கியுள்ள மூன்று (03) மாறிகளை (variables) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட பேட் அன்ட் சண்ஸ்** கம்பனியின் முகாமையானது உள்ளக அழைப்பு நிலையம் ஒன்றைப் பேணுவதை விட அழைப்பு நிலையத் தொழிற்பாடுகளை வெளிமூலமிடுவதால் (outsourcing) ஏற்படும் கிரயங்கள் மற்றும் நன்மைகள் பற்றித் தற்போது கவனம் செலுத்துகிறது.

வியாபாரச் செயன்முறை வெளிமூலமிடலின் (Business Process Outsourcing - BPO) அனுகூலங்கள் இரண்டையும் (02) பிரதிகூலங்கள் இரண்டையும் (02) **கூறுக.** (04 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட பேட் அன்ட் சண்ஸ்** கம்பனியின் நான்கு (04) நாட்டதாரர்களை (stakeholders) **அடையாளம் காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |